# கடலூர் பெருநகராட்சி

2018ம் ஆண்டு ஜுன் மாதம் 19–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்ற அவசரக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம் | தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் | கடலூர் பெருநகராட்சி.
நாள் 19.06.2018

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை உரமாக்குவதற்கு பாபு கலையரங்கத்தில் நுண் உரக்குடில் மையம் அமைக்கும் பணி ரூ.95.00 இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு மானியம் பெற்று செயல்படுத்திட முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம். |
| ந.ம.தீ. எண் 2204 | அனுமதிக்கப்பட்டது |
| 2. | கோவை நகரியல் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளர்களுக்கான விரிவாக்க பயிற்சி வகுப்பிற்கு இதுவரை பயிற்சியில் கலந்து கொள்ளாத இளநிலை உதவியாளர்களை பயிற்சிக்கு அனுப்பி வைக்கவும், பயிற்சி கட்டணம் நாள் ஒன்றிற்கு நபர்ஒருவருக்கு ரூ.1000/– செலுத்தவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. கடலூர் நகராட்சி பணியாளர்களில் தற்பொழுது 2018–19 நிதியாண்டில் திரு.டி.பவித்ரன் மற்றும் எம்.விஸ்வநாதன் ஆகிய இரண்டு இளநிலை உதவியாளர்களை மேற்படி பயிற்சிக்கு அனுப்பி வைக்க இரண்டு நபர்களுக்கு செலவு தொகை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு தலா ரூ.1000/– வீதம் பயிற்சிக் காலத்திற்குரிய தொகையை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | அனுமதி வழங்கலாம். |
| ந.ம.தீ. எண் 2205 | அனுமதிக்கப்பட்டது |
| 3. | கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரையேறிவிட்டகுப்பம் வார்டு 3, ப்ளாக் 53, நகரளவு எண்கள்.2048/2A1A மற்றும் 2049/1A2–ல் 3 ஏக்கர் 55 செண்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு என்,துரை என்கிற கலியமுர்த்தி அவர்களின் |

| | |
|---|---|
| | விண்ணப்பத்ததின்பேரில், உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூார் அவர்களின் கடித ந.க.எண்.09/2018/க.உ.தி.கு., நாள்.22.03.2018–ல் சாலை அமைப்பு வரைபடத்தின்படி, முறையாக சாலை அமைத்து, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி ஏற்றுக் கொண்டு பத்திரநகலை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து முறையாக சாலை அமைத்து, அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக 28–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது மேலும் தெரு மின் விளக்குகளுக்கான கட்டணங்கள் மின்சாரவாரியத்தில் செலுத்தி ரசீது நகல் இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து இந்நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கக்கப்படுகிறது. |
| <u>அ.கு.</u>. | மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் முறையாக செய்துள்ளதாக 28–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது எனவே சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு பதிவு அலுவலகம் வாயிலாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1045/2017/எப்2) |
| ந.ம.தீ.<br>எண்<br>2206 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 4. | கடலூார் பெருநகராட்சி திருப்பாதிரிப்புலியூர் கிராமம் தொகுதி எண்.3. பகுதி எண் 60, நகரளவு எண்.2287, 2290/1, 2, 3, 2320, 2291, 2293 மற்றும் 2321–ல் 4.02 ஏக்கர் பரப்பு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றம் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017–ன் படி உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம், கடலூார் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.205/2018/க.உ.தி.கு. நாள். 26.04.2018–ல் கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.செ.(க.உ.தி.கு) எண்.R-32/2018 என எண்ணிடப்பட்டு கொள்கையளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளின் மொத்த பரப்பு–40406 சதுரஅடி மற்றும் பூங்காவின் பரப்பு–3572 சதுரஅடியினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காவிற்கான இடத்தினை தானப்பத்திரம் மூலம் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
| <u>அ.கு.</u>. | உறுப்பினர்செயலர், உள்ளூர் திட்ட குழுமம் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைப்படத்தின்படி சாலையின் பரப்பு 40406 சதுரஅடி இடம் மற்றும் பூங்கா–3572 சதுரஅடி இடத்தினை நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பதை ஏற்றுக் கொள்ளலாம்.<br>(ந.க.எண்.3992/2018/எப்2) |
| ந.ம.தீ.<br>எண்<br>2207 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்,

கடலூர் — கடலூர் நகராட்சி.

நாள் 19.06.2018

<u>கடலூர் பெருநகராட்சி</u>

**19.06.2018ம் தேதிய கடலூர் நகர்மன்ற அவசரக் கூட்டத்தின்**

**2206 எண்ணுள்ள தீர்மானத்தின் நகல்**

கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரையேறிவிட்டகுப்பம் வார்டு 3, ப்ளாக் 53, நகரளவு எண்கள்.2048/2A1A மற்றும் 2049/1A2–ல் 3 ஏக்கர் 55 செண்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு என்,துரை என்கிற கலியமூர்த்தி அவர்களின் விண்ணப்பத்ததின்பேரில், உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூார் அவர்களின் கடித ந.க.எண்.09/2018/க.உ.தி.கு., நாள்.22.03.2018–ல் சாலை அமைப்பு வரைபடத்தின்படி, முறையாக சாலை அமைத்து, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி ஏற்றுக் கொண்டு பத்திரநகலை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து முறையாக சாலை அமைத்து, அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக 28–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது மேலும் தெரு மின் விளக்குகளுக்கான கட்டணங்கள் மின்சாரவாரியத்தில் செலுத்தி ரசீது நகல் இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து இந்நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கக்கப்படுகிறது.

<u>அ.கு.</u> மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் முறையாக செய்துள்ளதாக 28–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது எனவே சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு பதிவு அலுவலகம் வாயிலாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண் 2206 நாள் 19.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்.) க.சரவணன்,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

# கடலூர் பெருநகராட்சி

## 29.06.2018ம் தேதிய கடலூர் நகர்மன்ற கூட்டத்தின் 2220 எண்ணுள்ள தீர்மானத்தின் நகல்

| | |
|---|---|
| | கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரையேறிவிட்டகுப்பம் வார்டு 3, ப்ளாக் 53, நகரளவு எண்கள்.2048/2A1A மற்றும் 2049/1A2–ல் 3 ஏக்கர் 55 செண்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு எம். ரமேஷ் அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களின் கடித ந.க. எண்.260/2017/க.உ.தி.கு., நாள்.08.12.2017–ம் தேதியிட்ட சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்தின்படி, முறையாக சாலை அமைத்து, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி ஏற்றுக் கொண்டு பத்திரநகலை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொறியியல் பிரிவு மூலமாக முறையாக சாலை அமைத்து, அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக 29–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது மேலும் தெரு மின் விளக்குகளுக்கான கட்டணங்கள் மின்சாரவாரியத்தில் செலுத்தி ரசீது நகல் இந்நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து இந்நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கக்கப்படுகிறது. |
| <u>அ.கு.</u> | மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் முறையாக செய்துள்ளதாக 29–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது எனவே சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து நகராட்சி வசம் எடுத்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் |

**நகர்மன்ற தீர்மான எண் 2220 நாள் 29.06.2018**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்.) க.சரவணன்,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

# **<u>கடலூர் பெருநகராட்சி</u>**

**2018ம் ஆண்டு ஜுன் மாதம் 29–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்<br>
கடலூர்<br>
நாள் 27.06.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,<br>
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

1. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட முதுநகர் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண் : 38 முதல் 45க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | உரக்குடில் அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 38 | சிங்காரதோப்பு |
| 2 | 39 | அக்கரை கோரி |
| 3 | 40 | பழைய காவலர் குடியிருப்பு |
| 4 | 42 | சுகாதார பிரிவு அலுவலகம் மருத்துவமனை அருகில் (O.T) |
| 5 | 42 | குட்டைகரா பல்ல தேரு |
| 6 | 45 | O.T.பச்சையன் குப்பம் |
| 7 | 45 | வீட்டு வாரியம் |

மேற்கண்ட 7 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 15.00 லட்சத்திற்க்கு மன்றத் தீர்மானம் எண் 2172 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. ஆர். நவநீதம், கடலூர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திருமதி. எஸ். மீரா, கடலூர் | 0.53% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. ஆர். நவநீதம், கடலூர் அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. ஆர். நவநீதம், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்

ந.ம.தீ. எண் 2208 — அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

2. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண் :1 முதல் 9 க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | உரக்கிடங்குகுடில்அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 2 | வரதராஜன் நகர் பூங்கா |
| 2 | 3 | காந்தி நகர் பூங்கா |
| 3 | 4 | வில்வ நகர் |
| 4 | 5 | ராஜம்பாள் நகர் |
| 5 | 8 | செந்தாமரை நகர் பூங்கா |
| 6 | 8 | பெண்ணையாறு ரோடு துப்புரவு ஆய்வாளர் அலுவலக வளாக பகுதி |
| 7 | 9 | தட்ஷாணமூர்த்தி நகர் பூங்கா |

மேற்கண்ட 7 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 15.00 லட்சத்திற்கு மன்றத் தீர்மானம் எண் 2167 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. ஆர். கே. சேஷாச்சலம், கடலூர் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திருமதி. ஆர். நவநீதம், கடலூர் | 1.20% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட

திரு. ஆர். கே. சேஷாச்சலம், கடலூர் அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஆர். கே. சேஷாச்சலம், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்

ந.ம.தீ. எண் 2209 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

3. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண் : 10 முதல் 15க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | உரக்கிடங்குகுடில் அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 10 | புல்லுக்கடை தெரு துப்புரவு ஆய்வாளர் அலுவலக வளாக பகுதி |
| 2 | 11 | காமராஜர் பூங்கா வளாகம் |
| 3 | 12 | சமுதாயா கட்டிடம் அருகில் உள்ள பூங்கா இடம் |
| 4 | 12 | பகவந்தர் நகர் பூங்கா வளாகம் |
| 5 | 14 | குருக்கள் நகர் பூங்கா வளாகம் |
| 6 | 14 | K.k நகர் கோவில் அருகில் உள்ள பூங்கா வளாகம் |

மேற்கண்ட 6 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 13.00 லட்சத்திற்க்கு மன்றத் தீர்மானம் எண் 2168 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. ஆர். நவநீதம், கடலூர் | 0.44% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திருமதி. எஸ். மீரா, கடலூர் | 0.20% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. ஆர். நவநீதம், கடலூர் அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.44% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. ஆர். நவநீதம், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை

உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.–** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.ம.தீ. எண் 2210** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**4.** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட திருப்பாபுலியூர் மற்றும் புதுப்பாளையம் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண் : 16முதல் 23க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | உரக்கிடங்குகுடில் அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 16 | சுனாமி நகர் நுழைவாயில் |
| 2 | 16 | தேவனாம் பட்டினம் OHT |
| 3 | 16 | சுனாமி நகர் |
| 4 | 17 | மரிய சூசை நகர் பூங்கா |
| 5 | 17 | குமார் ராஜா நகர் பூங்கா |
| 6 | 18 | மீன் மார்க்கெட் |
| 7 | 18 | இடுகாடு பகுதி வளாகம் |
| 8 | 19 | சலவையாளர் நிலையம் அருகே |
| 9 | 21 | சுப்புராயலு நகர் பூங்கா |
| 10 | 21 | குப்பன் குளம் |
| 11 | 23 | கம்மியம் பேட்டை கம்பேஸ் யாடு |

மேற்கண்ட 11 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 24.00 லட்சத்திற்க்கு மன்றத் தீர்மானம் எண் 2169 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு. எஸ். சரவணன், கடலூர் | 0.14% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. வி. சுரேஷ்பாபு, கடலூர் | 5.53% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. எஸ். சரவணன், கடலூர்அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.14% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். சரவணன், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.–** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| ந.ம.தீ. எண் 2211 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

5\. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட திருப்பாபுலியூர் மற்றும் புதுப்பாளையம் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண்: 23முதல் 30க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | உரக்கிடங்கு குடில் அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 23 | NULM shelter |
| 2 | 24 | தானம் நகர் பூங்கா |
| 3 | 27 | பான் பரி மார்க்கெட் |
| 4 | 28 | சக்தி நகர் பூங்கா |
| 5 | 28 | முத்தையா நகர் பூங்கா |
| 6 | 28 | கமலம் நகர் பூங்கா |
| 7 | 28 | விஜயதாஸ் நகர் |
| 8 | 29 | நடேசன் பூங்கா |
| 9 | 29 | பொன்னுசாமி நகர் |
| 10 | 30 | பங்கஜம் கார்டன் |

மேற்கண்ட 10 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 22.00 லட்சத்திற்க்கு மன்றத் தீர்மானம் எண் 2170 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.சரவணன், கடலூர் | 0.20% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.வி.சுரேஷ்பாபு, கடலூர் | 5.53% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. எஸ். சரவணன், கடலூர் அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.20% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். சரவணன், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| ந.ம.தீ. எண் 2212 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**6.**

கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட முதுநகர் பகுதியை உள்ளடக்கிய வார்டு எண் : 31 முதல் 37க்கு உட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் அப்பகுதிலேயே. சேகரிக்கப்டும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்க ஏதுவாக (Onsite Composting) சிறு உரக்குடில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | உரக்குடில் அமைக்கவுள்ள இடம் |
|---|---|---|
| 1 | 32 | குழந்தை காலனி |
| 2 | 33 | மதிமினாச்சி நகர் |
| 3 | 34 | E.B.காலனி |
| 4 | 35 | சுனாமி நகர் (ஏனிகாரன் தேட்டம்) |
| 5 | 36 | மோகன் சிங் பூங்கா |
| 6 | 36 | அன்தோணியார் தெரு |
| 7 | 37 | சோனங்குப்பம் |

மேற்கண்ட 7 இடங்களுக்கு உரக்குடில் அமைக்க மதிப்பீடு ரூ 15.00 லட்சத்திற்க்கு மன்றத் தீர்மானம் எண் 2171 , நாள் 18.05.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 04.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. ஆர். நவநீதம், கடலூர் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 1.07% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. ஆர். நவநீதம், கடலூர் அவர்கள் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. ஆர். நவநீதம், கடலூர்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.–** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.ம.தீ. எண் 2213** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**7.**

கடலூர் பெருநகராட்சி திருப்பாதிரிப்புலியூர் பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்கண்ட கடையினை அனுபவிக்க உரிமம் பெற்ற உரிமைதாரர்கள் நகராட்சிக்கு வாடகை செலுத்தாததால் பூட்டி சீல் வைக்கப்பட்டு நகராட்சி வசப்படுத்தப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் குத்தகை பாக்கி செலுத்தாததால் நீதிமன்றம் மூலம் சட்டப்படி நடவடிக்கை கடுக்க இந்நகர்மன்றம் தீர்மான எண் 1788 நாள் 15.6.17ல் அனுமதிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின்படி நிலுவைத் தொகை செலுத்த பலமுறை நேரிலும் பதிவுத் தபால்

மூலம் அனுப்பி வைக்கப்பட்டதில் சம்மந்தப்பட்டவர்களால் நிலுவைத் தொகையை இதுநாள்வரை செலுத்தப்படவில்லை. சட்டப்படி வசூல் செய்ய நகராட்சி வழக்கறிஞர் மூலம் வழக்கறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழிக்கறிவிப்பு சம்மந்தப்பட்டவர்களால் வாங்காமல் திருப்பப்பட்டது என்றும் வழக்கு தாக்கல் செய்ய கீழ்க்கண்ட விபரப்படி செலவாகும் என தனது 29.5.2018 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

| கடை எண் | வரி விதிப்பு எண் | வாடகை நிலுவை வைத்துள்ள குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் | குத்தகை நிலுவை காலம் | குத்தகை நிலுவை ரூ. | சரக்கு மற்றும் சேவை வரி ரூ. | மொத்தம் ரூ. | வழக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 840 | எஸ்.சந்திரா | 9/10to3/15 | 1274000 | 229320 | 1503320 | 45100 |
| 6 | 841 | எஸ்.சந்திரா | 9/05to3/15 | 1456700 | 262206 | 1718906 | 51567 |
| 41 | 838 | எஸ்.தண்டபாணி | 9/15to3/15 | 68837 | 12388 | 81225 | 2437 |
| 47 | 448 | எஸ்.தாட்சாயிணி | 9/05to3/15 | 206900 | 37242 | 244142 | 7324 |
| | | | | 3006437 | 541159 | 3547596 | 106428 |
| | | | | | இதர கட்டணம் | | **42025** |
| | | | | | மொத்தம் | | **148453** |

(ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து நானூற்று ஐம்பத்தி மூன்று மட்டும்)

மேற்படி தொகையை செலுத்தி சட்டப்படி நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.– 1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

ந.ம.தீ. எண் 2214 — அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

8. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு 33 வசந்தராயன்பாளையம் உரக்கிடங்கில் காவலர் அறை, நிர்வாக அலுவலகம் மற்றும் உரம் தயாரிக்கும் புதிய அறவை இயந்திரம் (Shredder machine) க்கு மின் இணைப்பு வழங்கவும், உரக்கிடங்கு கூடாரத்திற்கு விளக்குகள் அமைக்கவும், மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் பணிகளை ரூ. 2.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை தூய்மைபாரத திட்ட சேமிப்பு நிதியிலிருந்து (SBM) மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– 1._மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.ம.தீ. எண் 2215 — அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

9. கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 45 கடலூார் முதுநகர் காவல் நிலையம், கிஞ்சம்பேட்டை மற்றும் உப்பனாறு அலுவலக சாலையில் 5 எண்ணிக்கை. ஆள்

| | |
|---|---|
| | இறங்கும் குழிகள் அமைக்கும் பணி ரூ.1,75,000/- (ரூபாய் ஒரு லட்சத்து எழுத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1._மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் |
| ந.ம.தீ. எண் 2216 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 10. | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 45 பச்சாங்குப்பம் மேல்நிலைத் தொட்டியில் உள்ள 300 mm DI பைப்பில் உள்ள 300 mm sluice valve கொள்முதல் செய்து பொருத்தும் பணி ரூ. 3,20,000/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1._மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் |
| ந.ம.தீ. எண் 2217 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 11) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட குண்டுசாலை நுண் உரம் தயாரிப்பு மையத்தில் அப்பகுதிகளில் கிடைக்கும் காய்கறி கழிவுகளை (மக்கும் குப்பை) அறைப்பதற்கு உரிய இயந்திரம் இல்லாத காரண த்தினால் இக்கழிவுகளை இயற்கை உரமாக்க முடிவதில்லை. எனவே, இப்பணி க்காக புதிய அறவை இயற்திரம் (Shredder machine) மற்றும் மாற்றி எடுத்துச் செல்லும் இயந்திரம் (Conveyor belt machine) ஆகியவற்றினை விநியோகம் செய்து பொருத்திடும் பணியினை ரூ. 5.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1._மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் |

| | |
|---|---|
| ந.ம.தீ. எண் 2218 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

12. கடலூர் பெருநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தணிக்கை பிரிவு அறைக்கு செல்லும் பழுதடைந்த மின் சர்வீஸ் ஒயர்களை மாற்றியமைக்கும் பணி ரூ. 0.36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 20.06.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. எஸ். தாட்சாயிணி, கடலூர் | மதிப்பீட்டு விலை விகிதம். |
| 2. | திருமதி.டி. வசந்தா, கடலூர் | 2.71% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. எஸ். தாட்சாயிணி, கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டு விலை விகிதம்) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திருமதி. எஸ். தாட்சாயிணி, கடலூர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்

பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| ந.ம.தீ. எண் 2219 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

13) கடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரையேறிவிட்டகுப்பம் வார்டு 3, ப்ளாக் 53, நகரளவு எண்கள்.2048/2A1A மற்றும் 2049/1A2–ல் 3 ஏக்கர் 55 செண்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு எம். ரமேஷ் அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களின் கடித ந.க. எண்.260/2017/க.உ.தி.கு., நாள்.08.12.2017–ம் தேதியிட்ட சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்தின்படி, முறையாக சாலை அமைத்து, சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சி ஏற்றுக் கொண்டு பத்திரநகலை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொறியியல் பிரிவு மூலமாக முறையாக சாலை அமைத்து, அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக 29–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின்படி சான்று அளிக்கப்பட்டுள்ளது மேலும் தெரு மின் விளக்குகளுக்கான கட்டணங்கள் மின்சாரவாரியத்தில் செலுத்தி ரசீது நகல் இந்நகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவே மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து இந்நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு.– | மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் முறையாக செய்துள்ளதாக 29–05–2018 ம் தேதிய பொறியியல் பிரிவு குறிப்பின் படி சான்று அளிக்கப்பட்டுள்ளது எனவே சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு செய்து நகராட்சி வசம் எடுத்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3882/2017/எப்2) |
| ந.ம.தீ.<br>எண்<br>2220 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 14) | கடலூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட மஞ்சக்குப்பம் கிராமம், உதாரமாணிக்கம் தெரு வார்டு – 7, பிளாக் – 27, நகரளவை எண்.1246/1A1-ல் 2.44 ஏக்கர் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு R. கிருஷ்ணராஜ் விண்ணப்பத்தின் பேரில், உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.112/2018/க.உ.தி.கு., நாள்.09.04.2018–ல் சாலை அமைப்பு வரைபடத்தின் படி முறையாக சாலை அமைத்து மற்றும் பூங்கா பகுதியை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், இந் நகர் மன்ற தீர்மானம் எண்.2166, நாள்.18.05.2018–ன் படி சாலை மற்றும் பூங்கா இடங்கள் பத்திரபதிவு ஆவண எண்.1654/2018, நாள்.05.06.2018–ன் படி நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.112/2018/க.உ.தி.கு.,நாள்.27.06.2018–ல் உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./க.உ.தி.கு.எண்.2/2018 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள இம் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு.– | மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் முறையாக அமைக்கப்பட்டு சாலை மற்றும் பூங்கா இடங்களை நகராட்சிக்கு பதிவு அலுவலகம் வாயிலாக பதிவு செய்து ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால், இம் மனை பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.867/2018/எப்1) |
| ந.ம.தீ.<br>எண்<br>2221 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 15) | கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கடலூர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. மேற்படி வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகவும், பத்திவாரி அறிக்கை தயார் செய்யவும் வழக்கறிஞர்களுக்கு வழக்குக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.<br>எனவே 2018–19ம் ஆண்டிற்கு வழக்கறிஞர்களுக்கு வழக்குக் கட்டணம் செலுத்த உத்தேசச் செலவினம் ரூ. 200000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம். |
| ந.ம.தீ.<br>எண்<br>2222 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 16) | கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 20 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் 5 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் ஆகிய கிருமி நாசினிகளை விநியோகம் செய்ய ஏற்கனவே உத்தேச செலவினம் ரூ. 400000/-க்கு மன்ற ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண் நாள். 30.04.2018.<br>அதன்படி 08.06.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 4 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளுக்கான ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | விவரம் | அளவு | ஜி.சிவப்பிரகாசம், ஒப்பந்ததாரர் | | திரு.ஆர்.நாகராஜன், ஒப்பந்ததாரர் | | திரு.பமீனா, ஒப்பந்ததாரர் | | திரு.ஆர்.நவனீதம், ஒப்பந்ததாரர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | பிளிச்சிங் பவுடர் | 5 மெட்ரிக் டன் | 35800/- | 179000/- | 33800/- | 169000/- | 34000/- | 170000/- | 35000/- | 175000/- |

வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. ஆர். நாகராஜன்**, கடலூர் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | |
|---|---|
| அ.கு.- | பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| ந.ம.தீ. எண் 2223 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17) | கடலூர் பெருநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 20 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் 5 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் ஆகிய கிருமி நாசினிகளை விநியோகம் செய்ய ஏற்கனவே உத்தேச செலவினம் ரூ. 400000/-க்கு மன்ற ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண் நாள். 30.04.2018.<br>அதன்படி 08.06.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 4 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | விவரம் | அளவு | ஜி. சிவப்பிரகாசம், ஒப்பந்ததாரர் | | திரு.ஆர். நாகராஜன், ஒப்பந்ததாரர் | | திரு. பமீனா, ஒப்பந்ததாரர் | | திரு. ஆர்.நவனீதம், ஒப்பந்ததாரர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | நீர்த்த சுண்ண | 20 மெட் | 6800/- | 13600 | 6400/ | 128000 | 6500/ | 130000 | 6900/ | 138000/- |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ாம்பு | ரிக்டன் | | 0/– | – | /– | – | /– | – | |

வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **திரு. ஆர். நாகராஜன்,** கடலூார் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.–** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.ம.தீ. எண் 2224** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**18)** கடலுார் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டுகளில் உள்ள 30 பள்ளிக்கழிப்பிடங்கள் மற்றும் 66 பொதுக் கழிப்பிடங்களை ஜி.எஸ்.இ.எம் என்விரான்மென்ட் சர்வீஸ், சென்னை என்ற தனியார் நிறுவனம் மூலம் 01.07.2017 முதல் ஒராண்டிற்கு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 30.06.2018 உடன் முடிவடையும் காரணத்தினாலும், மேலும், 2018–19ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க. 32050/ஜே2/2016–1, நாள். 07.02.2016 தேதிய கடிதத்தின்படியும், அரசாணை (நிலை) எண். 166 ந.நி.ம.கு.வ.துறை, நாள். 23.11.2016 வழிகாட்டுதல்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கி பணி ஆரம்பிக்கும் வரையில் 01.07.2018 முதல் 31.12.2018 வரை 6 மாதங்களுக்கு, ஏற்கனவே பணி மேற்கொண்ட ஜி.எஸ்.இ.எம் என்விரான்மென்ட் சர்வீஸ், சென்னை என்ற நிறுவனம் 30 பள்ளிக் கழிப்பிடங்கள் சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதியும், அதற்குண்டான செலவினம் ஒரு மாதத்திற்கு ரூ.107583/– வீதம் 6 மாதத்திற்கு ரூ.**645498/–** நகராட்சி கல்வி நிதி மேற்கொள்ள மன்ற அனுமதியும் கோரப்படுகிறது.

**அ.கு.–** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.ம.தீ. எண் 2225** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**19)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடங்கள் 4332 எண்ணிக்கை கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தூய்மை பாரத திட்டத்தின் பரப்புரையாளர்கள் மூலம் மேற்படி தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணியினை களஆய்வு செய்யப்பட்டதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை காட்டிலும் கூடுதலாக **1500** எண்ணிக்கையில் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்றத் தீர்மான எண் 2087 நாள் 22.02.2018ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்குறிய தொகை வழங்க தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. பார்வையில் காணும் கடிதத்தில், மீண்டும் தூய்மை பாரத திட்டத்தின் பரப்புரையாளர்கள் மூலம் மேற்படி தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணியினை மறு ஆய்வு செய்யப்பட்டதில் கூடுதலாக 1761 எண்ணிக்கையில் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு 27.03.2018ல் கடிதம்

| | |
|---|---|
| | அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் தூய்மை பாரத திட்டத்தின் பரப்புரையாளர்கள் மூலம் மேற்படி தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணியினை மறு ஆய்வு செய்யப்பட்டதில், 1005 பயனாளிகள் தங்களின் சொந்த செலவில் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள 756 தனி நபர் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் மட்டும் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே, மொத்தம் 2256 (1500+756) குடும்பங்களுக்கும் தனி நபர் கழிப்பறை கட்டுதல் அவசியமாகிறது.எனவே, இப்பணிகள் தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி கோரவும், மேலும் இப்பணிகளுக்கான மத்திய அரசு பங்குத் தொகை ரூ. 90.24 இலட்சம் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை ரூ. 45.12 இலட்சம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து பெறவும், நகராட்சி பங்குத் தொகை ரூ. 45.12 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும், மேற்படி கூடுதலாக 2256 எண்ணிக்கை தனி நபர் கழிப்பிடங்கள் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் 2256 எண்ணிக்கை தனி நபர் கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி கோரவும், மேலும் இப்பணிகளுக்கான மத்திய அரசு பங்குத் தொகை ரூ. 90.24 இலட்சம் மற்றும் மாநில அரசு பங்குத் தொகை ரூ. 45.12 இலட்சம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து பெறவும், நகராட்சி பங்குத் தொகை ரூ. 45.12 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| ந.ம.தீ. எண் 2226 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 20) | கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் தெரு விளக்கு பராமரிப்பு பணியை மேற்கொள்ளும் சன் வியூ நிறுவனம் தங்கள் பணியை நிறுத்தி கொள்வதால், 01.07.2018 முதல் தெருவிளக்கு பராமரிப்பு பணியை மேற்கொள்ளும் பெருட்டு (மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை 8500 எண்கள்) வரும் ஆறு மாத காலத்திற்கு (01.07.2018 முதல் 31.12.2018) நகராட்சி மூலம் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் போதிய பணியாளர்கள் இல்லாததாலும் , ஒப்பந்தபுள்ளி மூலம் பணியாளர்கள் பெற்று (Labour Contract) (மின் கம்பியாளர் GR– II-10 Nos, Wireman Helper-10 Nos) பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு 6 மாத காலத்திற்கு ஆகும் தோராயசெலவினம் ரூ.20,70,000/–க்கு நிர்வாக அனுமதியும், மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம் |
| ந.ம.தீ. எண் 2227 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 21) | கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி TN31 A 2224ல் 19.06.2018 தகுதி சான்று முடிவடைவதால் அதனை ஒரண்டு காலத்திற்கு புதுப்பிக்க ஆகும் தேராய செலவினம் ரூ.60,000/– க்கு நிர்வாக அனுமதியும் மேற்கண்ட |

செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்தும் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்

ந.ம.தீ. எண் 2228 — அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

22) கடலூர் பெருநகராட்சி பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை பணிக்காக இயங்கி வரும் D-Silt வாகனங்கள் TN-31-AF-6881 மற்றும் TN-31-AF-6939 ஆகியவற்றிற்கு 2018–2019 ஆம் ஆண்டிற்கான ஆயுள் காப்பீட்டு தொகை ரூ.19,772 ஐ (ஒரு வாகனத்திற்கு .ரூ 9886 X 2) செலுத்தி ஆயுள் காப்பீடு புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் இதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

அ.கு.– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.ம.தீ. எண் 2229 — அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

23) கடலூர் பெருநகராட்சிகுட்பட்ட இலகுரக ஓட்டுநர் பணிக்காக 1 (ஒரு) நபர் தேவைப்படுவதால் ஓட்டுநர் உரிமம் பெற்ற, 10 ஆண்டுகள் ஓட்டுநர் பணியில் அனுபவம் வாய்ந்த தகுதியுள்ள திறமையான ஓட்டுநரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிகமாக பணி அமர்த்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.47,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு 27.03.2018ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.V. சுரேஷ் பாபு ,கடலூர் | 1.83% மதிப்பீட்டை விட அதிகம். |
| 3. | திரு.S. கிருஷ்ண மூர்த்தி , பாகூர் | 0.57% மதிப்பீட்டை விட அதிகம். |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06% குறைவு வழங்கியுள்ள திரு.T.சேஷாத்திரி அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று. அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

அ.கு.– மன்றம் பதிவு செய்யலாம்

| ந.ம.தீ. எண் 2230 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
|---|---|

**24)**

கடலூர் பெருநகராட்சியில் உள்ள அலுவலக ஜீப் TN-31F 7171 வாகனத்திற்கு ,12 Volt II Phase மின்கலம் (பேட்டரி) கொள்முதல் செய்யும் பணி ரூ.9500 மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 05.04.2018ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் | 9,500 |
| 2. | விநாயகா ஆட்டோ கேரேஜ் II, கடலூர் | 11,000 |
| 3. | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ டீசல் வேலை, கடலூர் | 10,500 |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட சரவணா ஆட்டோ மொபைல்ஸ் கடலூர் என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி (9,500 மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளனர். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள. சரவணா ஆட்டோ மொபைல்ஸ், கடலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| அ.கு.– | மன்றம் அனுமதிக்கலாம் |
|---|---|
| ந.ம.தீ. எண் 2231 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 27.06.2018

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் நகராட்சி.